**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.10
https://ngmtamil.in/

# Silappathikaram: A Folk Epic

**Dr.G.Vadivelmurugan***,
Assistant Professor & Head, Department of Tamil, Urumu Dhanalakshmi College, Tiruchirappalli - 620 019 Tamilnadu, India.
*Correspondence: vadivelmurugantnj@gmail.com, Tel: +919489771622

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

Like the two sides of a coin, folk traditions and literature are fundamentally intertwined: literature is built upon the foundation of folk traditions, while folk traditions are, in turn, shaped by literary structures. This remains an undeniable aspect of both folk and literary traditions. In other words, oral traditions may be considered the primary source of literature, and oral songs can be viewed as the earliest precursors of literary forms, both logically and chronologically. Through this continuous process of exchange and transmission over time, the Silappatikaram, which narrates the story of Kannagi deeply rooted in Tamil society, is examined in this study as a folk epic. This constitutes the central focus of the present paper.

**Keywords**; *Silappathikaram, Folklore Traditions, Folk Tales, Folk Arts, Folk Beliefs.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# நாட்டுப்புறக் காப்பியம் சிலப்பதிகாரம்

***முனைவர் கு.வடிவேல்முருகன்**

உதவிப்பேராசிரியர், தலைவர், தமிழ்த்துறை,

உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 019.

**கட்டுரைச் சுருக்கம்**

நாணயத்திற்கு இருபக்கங்களைப்போல் நாட்டார் வழக்காறுகளின் அடிப்படைக் கட்டமைப்பில் இலக்கியங்களும், இலக்கியங்களின் அடிப்படைக் கட்டமைப்பின்மேல் நாட்டார் வழக்காறுகளும் பின்னிப்பிணைந்துள்ளன என்பது நாட்டார் மரபிலும் இலக்கிய மரபிலும் மறுக்க முடியாத உண்மையாகும். அதாவது, நாட்டார் வழக்காறுகளின் அடிப்படையான வாய்மொழி வழக்காறுகளே இலக்கியத்தின் தாய் என்றும், வாய்மொழிப் பாடல்களே தர்க்க அடிப்படையிலும் கால அடிப்படையிலும் இலக்கியத்தின் முன்னோடிகளாக அமைகின்றன என்றும் கூறலாம். காலந்தோறும் தொடர்ந்து வரும் இந்தக் கொள்வினை, கொடுப்பினை என்ற முறையில், தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றிய கண்ணகிக் கதையைக் கூறும் சிலப்பதிகாரம் ஒரு நாட்டுப்புறக் காப்பியம் என்ற தேடலே இக்கட்டுரையாகும்.

**திறவுச் சொற்கள் (Keywords):** சிலப்பதிகாரம், நாட்டுப்புற மரபுகள், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறக் கலைகள், நாட்டுப்புற நம்பிக்கைகள்.

**முன்னுரை**

தொடக்கக் காலத்தில் மனித உணர்வு பலவிதப் பட்டறிவால் பதப்பட்டும் பட்டை தீட்டப்பட்டும் வந்துள்ளது. பட்டறிவே மனித மனத்தை ஒழுங்கு செய்யும் உன்னதக் கருவியாக உள்ளது. உணர்ச்சிகளின் உயிரோட்டங்களே மானுடவியல் வளர்ச்சியாகும். மானுட சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சி நாட்டுப்புற வழக்காறுகள். இந்நாட்டுப்புற வழக்காறுகள்மேல் தொடங்கப்பெற்ற ஆய்வுகள் 19 ஆம் நூற்றாண்டிலேயே முதன்மைபெற ஆரம்பத்துவிட்டன. நாணத்திற்கு இருபக்கங்களைப்போல் நாட்டார் வழக்காறுகளின் அடிப்படைக் கட்டமைப்பில் இலக்கியங்களும், இலக்கியங்களின் அடிப்படைக் கட்டமைப்பின்மேல் நாட்டார் வழக்காறுகளும் பின்னிப்பிணைந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. அதாவது, நாட்டார் வழக்காறுகளின் அடிப்படையான வாய்மொழி வழக்காறுகளே இலக்கியத்தின் தாய் என்று கூறலாம். வாய்மொழிப் பாடல்களே தர்க்க அடிப்படையிலும் கால அடிப்படையிலும் இலக்கியத்தின் முன்னோடிகளாகின்றன. காலந்தோறும் தொடர்ந்து வரும் இந்தக் கொள்வினை, கொடுப்பினை

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 

ஒருவழிப்பாதையன்று. அம்முறையில், தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றிய கண்ணகிக் கதையைக் கூறும் சிலப்பதிகாரம் ஒரு நாட்டுப்புறக் காப்பியம் என்பதை விளக்குவதே இக்கட்டுரையாகும்.

**நாட்டார் வழக்காற்றில் சிலப்பதிகாரம்**

தமிழ் மொழியின் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று என்றும் குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம் என்றும் பெருமை பெற்ற முதல் தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம்,

1. நாட்டுப்புறக் கதைகள்
2. நாட்டுப்புறப் பாடல்கள் - கதைப்பாடல்கள்
3. நாட்டுப்புற ஆடல் கலைகள்
4. நாட்டுப்புற நம்பிக்கைகள்

ஆகிய கூறுகளைத் தன்னகத்தேக் கொண்டதால் அதனை நாட்டுப்புறக் காப்பியம் என்று கருதலாம்.

**1. நாட்டுப்புறக் கதைகள்**

நாட்டுப்புற இலக்கியத்தின் பல்வேறு கூறுகளில் ஒன்று நாட்டுப்புறக் கதைகளாகும். இக்கதைகள் வாய்வழியாகப் பரவுவதாகும். ஒரு நிகழ்ச்சியை விளக்(ங்)கிக் கொள்ள மனிதன் கற்பனையுடன், தன் அனுபவத்தையும் இணைத்து ஏற்படுத்திக் கொண்டதே கதைகள் தோன்ற அடிப்படைக் காரணமாகும். மனிதன் தோன்றியபோதே கதைகளும் தோன்றிவிட்டன என்று கூறலாம். தனது அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொல்லத் தொடங்கிய நிகழ்வு கதைகளின் தொடக்கமாகும். மக்கள் கூட்டங்கூட்டமாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்றபோதும் கால்நடை மேய்ச்சலுக்காக அலைந்து திரிந்த போதும் தாம் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையும் கதையாகச் சொல்லத் தொடங்கினான். இவை வாய்மொழியாகப் பலருக்கும் கூறப்பட்டன. இம்முறையிலேயே கதைகள் உருவாகத் தொடங்கிற்று. நாட்டுப்புற மக்களிடையே கதை கூறுவது என்பது பொதுவான பண்பாகும். மக்கள் தங்களது வாழ்வியல் நீதிகளுக்காகவும், பொழுது போக்கிற்காகவும் கதைகளை உரைத்தனர்; இன்றளவும் உரைத்து வருகின்றனர்; நாளையும் கதையினைக் கூறுவார்கள். ஏனென்றால், கதையினைக் கூறுபவரும் கதையினைக் கேட்பவரும் அந்தந்தக் கதைகளோடு தங்களையும் இணைத்துக் கதை கேட்கின்றனர்.

காப்பியங்கள் தோன்றுவதற்கு நாட்டுப்புறத்தில் வழங்கும் கதைகளே மூலக் காரணம் என்றால் மிகையாகாது. ஒருநாள் சேரன் செங்குட்டுவன், அரசி வேண்மாள், மதுரைச் சங்கப் புலவரான சாத்தனார், அரசைத் துறந்து குணவாயிற் கோட்டத்தில் அருந்தவம் புரிந்திருந்த இளங்கோவடிகள்

ஆகிய இந்நால்வரும் தம் பரிவாரங்களோடு இயற்கையழகை நுகரத் திருசெங்குன்றத்திற்குச் சென்றனர். அக்குன்றத்தில் இருந்த குறவர்கள் ஒருங்குகூடி அரசனிடம் வந்து வணங்கி, "பொன்மலர் பொலியும் வேங்கை மரத்தின் நிழலில், ஒற்றை முலையிழந்த ஓர் அழகிய வீரபத்தினி நின்றிருக்க, தேவேந்திரனைச் சார்ந்த தேவர்கள் அவள் முன்வந்து வணங்கி, அப்பத்தினியின் கணவனை அவளுக்குக் காட்டினர். உடனே, அவளுடன் அனைவரும் எமது கண்கள் காண விண்ணகம் சென்றனர்" என்ற செய்தியைச் சொன்னார்கள். இச்செய்தி கேட்ட சேரன் வியந்து, அப்பத்தினியின் முழு வரலாற்றையும் அறிய விரும்பினான். "அப்பத்தினிக்கு விழைந்ததை யான் அறிவேன்" என்று மதுரைப் புலவர் சாத்தனார் விளம்பலானார்.

நாட்டுப்புறங்களில் கண்ணகி கதை கூத்தாகி ஆடப்பட்டு வந்தது. அந்தக் கூத்தினை 1948 இல் ரா.பி.சேதுப்பிள்ளை, 'தமிழின்பம்" என்னும் தம் நூலில் 'கண்ணகிக் கூத்து' என்னும் கட்டுரையில் இதனைப் பதிவு செய்துள்ளார். முதன்முதலில் கண்ணகிக் கூத்தினை விமர்சனம் செய்த ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் சிலப்பதிகாரத்திற்குப் பின் வழங்கி வரும் நாட்டுப்புறக்கதை எனும் கோணத்திலேயே அக்கூத்தினை அணுகியுள்ளார். சிலப்பதிகாரத்தோடு ஒப்பிட்டு அக்கூத்து இலக்கியத்தின் வடிவத்தில் சிதைந்திருப்பதையும் அந்நூலில் குறித்துள்ளார். இந்த கதைசொல்லல் வழியாகத்தான் சிலப்பதிகாரக் காப்பியம் தோன்றியது. இதற்கு மூலக்கரு நாட்டார் வழக்காறேயாகும். இக்கதைசொல்லல் மரபு காப்பியத்திற்குள்ளும் வெகுவாக இடம்பெற்றிருத்தலால் சிலப்பதிகாரம் நாட்டுப்புறக் காவியம் என்ற நிலையை அடைகிறது.

சிலப்பதிகாரத்தில் முதன்மைக் கதையான கண்ணகி, கோவலன், மாதவி இவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளோடு சிலம்பின் முப்பது காதைகளுள் பின்வரும் ஏழு காதைகளில் 11 வகையான நாட்டுப்புறக் கதைகள் இடம்பெற்றுள்ளன.

| **வ. எண்** | **கதைகள்** | **காதை** |
|---|---|---|
| 1. | மாலதி கதை | கனாத்திறம் உரைத்த காதை |
| 2. | பார்ப்பனி கதை | அடைக்கலக் காதை |
| 3. | குரங்குக்கை, வானவன் கதை | |
| 4. | இராமன் கதை | ஊர்காண் காதை |
| 5. | நளன் கதை | |
| 6. | கற்புடைய மகளிர் கதை | வஞ்சினமாலை |
| | | வரம்தரு காதை |

| | | |
|---|---|---|
| 7. | சிபிச்சக்கரவர்த்திக் கதை | வழக்குரைக் காதை |
| 8. | மனுநீதிச் சோழன் கதை | |
| 9. | பொற்கைப் பாண்டியன் கதை | கட்டுரைக் காதை |
| 10. | வார்த்திகன் கதை | |
| 11. | கோவலனின் முற்பிறவிக் கதை | |

**2. நாட்டுப்புறப் பாடல்கள் - கதைப்பாடல்கள்**

சங்க இலக்கியத்திற்கு அடுத்த நிலையில் இசை பரந்து விரிந்து காணப்படும் இலக்கியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலம்பின் ஆசிரியர் இளங்கோவடிகள் கற்றுணர்ந்த பண்பாட்டு மாமேதை என்பதால் நாட்டார் வழக்காற்றில் இசை, இசையோடு கூடிய கூத்து, நாடகம் என்று நாட்டுப்புற வழக்காறுகளை உள்வாங்கிக் காப்பியமாகப் படைக்கிறார். மேலும், நாட்டார் வழக்காற்றில் உள்ள பாடலை மையமாகக் கொண்டே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதி இருக்க வேண்டும். அவ்வகையில், நாட்டுப்புறப் பாடல்களில் முதன்மை பெறுகின்ற காதல், வீரம், தொன்மம், சடங்குகள் போன்ற கருப்பொருள்கள் சிலப்பதிகாரத்தில் அமைகிறது.

சிலம்பின் முப்பது காதைகளில் மங்கல வாழ்த்துப் பாடல் நலங்குப் பாடல் வகையிலும், கானல்வரி ஆற்றுவரிப் பாடல் வகையிலும், துன்பமாலை மற்றும் ஊர்சூழ் வரி ஒப்பாரிப் பாடல் வகையிலும், வஞ்சின மாலை வஞ்சினம் கூறும் பாடல் வகையிலும் ஆகிய ஐந்து காதைகளும் நாட்டுப்புறப் பாடலின் அமைப்பில் அமைந்தவையாகும். மேலும், தெய்வம் சுட்டிய வரிப்பாட்டுகளாகக் கொற்றவையைப் பாடிப்பரவும் வேட்டுவவரி, திருமாலைப் பாடிப் பரவும் ஆய்ச்சியர் குரவை, முருகனைப் பாடிப் பரவும் குன்றக் குரவை ஆகிய மூன்று காதைகளும் நாட்டுப்புறக் கதைப்பாடல் அமைப்பிலும் அமைகின்றன. இவ்வெட்டுக் காதைகளும் நாட்டார் மரபில் வரும் இசையோடு மக்களின் வாழ்வியல் வழக்காறுகளை மையப்படுத்தி அமைந்துள்ளன எனலாம்.

மனிதன் தன் மனதில் தோன்றியவற்றையோ அல்லது கண்ணால் கண்டவற்றையோ மற்றவர்க்குக் கதையாக, ஓசை நயத்துடன் எடுத்துரைப்பதே கதைப்பாடலாகும். கதைப்பாடல்களில் புராணக் கதைப்பாடல்கள், தெய்வக் கதைப்பாடல்கள், வீரர்கள் பற்றிய கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள், நிகழ்வுகளைக் கதையாகப் பாடுதல் எனப் பலவுண்டு.

காப்பியத்தின் முதல் காதையே மங்கல வாழ்த்துப் பாடல் என அழைக்கப்படுகின்றது. கோவலன் - கண்ணகியரின் திருமண நிகழ்வும் நலங்கு முறைகளும் நாட்டார் வழக்காற்றின் பண்பாட்டு வளர்ச்சி என்றே கூறலாம். கிராமப்புறங்களில் இன்றைக்கும் கோயில்

திருவிழாக்களிலோ அல்லது பண்டிகைக் கால விழாக்களிலோ கும்மி முதலான நாட்டார் வழக்காற்றுப் பாடல்களில் தங்கள் எண்ணக் கருத்துக்களை இலைமறை காயாக வெளிப்படுத்துவது வழக்கம். இந்த நிலையிலே சிலப்பதிகாரக் கானல்வரியும் அமையப் பெற்றுள்ளது.

வரிப்பது வரிப்பாடல். வரிப்பது என்றால் வருணிப்பது. வருணித்துப் பாடும் இசைப்பாடல் மற்றும் ஆடல் வரிப்பாடல் ஆகும். துள்ளல், தூக்கல், அகவல் நடைபோட்டு ஒய்யாரமாய் ஓடுபவை. இக்கானல்வரியில் ஆற்றுவரி, சார்த்துவரி, முரிவரி, திணைநிலைவரி, மயங்கு திணைநிலைவரி, சாயல்வரி, முகமில்வரி போன்ற ஒன்பது வகை வரிப்பாடல்களை இருவரும் பாடுவதாக இளங்கோவடிகள் எழுதியுள்ளார்.

கானல் வரி என்பது கடற்கரைச் சூழலில் பாடப்படும் இசைப்பாடலாகும். இக்கானல்வரியில் கோவலனும் மாதவியும் மாறிமாறிக் காதற்சுவை மிக்க வரிப்பாடல்களைப் பாடுகின்றனர். நாட்டுப்புறப் பாடல் மரபில் எசைப்பாட்டு என்னும் எதிர்ப்பாட்டு, வினா - விடை முறையில் அமையும் பாடலாகும். இங்குக் கோவலனும் மாதவியும் பாடுகின்ற முரிவரிப்பண் என்னும் முறித்துப்பாடுதல் மேற்குறித்த எசைப்பாட்டு மரபாகும். இருவரும் தாம் பாடிய பாடல்களின் பொருளை மாறிமாறித் தவறாகப் புரிந்துகொண்டு, ஊழ்வினை வலிய அவர்களுக்குப் பிரிவு நேர்கிறது.

தெய்வம் சுட்டிய வரிப்பாட்டுகள் இறைவனின் திருவிளையாடல்களையும் புராணங்களையும் அவதாரச் செய்திகளையும் தன்னகத்துக் கொண்ட கதைப்பாடல்களாக அமைந்துள்ளன.

1. வேட்டுவவரி - பாலை நில மக்களின் குல தெய்வமாகிய கொற்றவை தெய்வத்தைப் பாடுகின்றது.
2. ஆய்ச்சியர் குரவை - முல்லைநில மக்களின் குலதெய்வமான மாயோனின் மகாபாரதச் செய்தி, விஷ்ணு புராணச் செய்தி, திருஅவதாரச் செய்தி, கிருஷ்ண லீலை போன்ற செய்திகளைப் பாடுகின்றது.
3. குன்றக் குரவை - மலைவாழ் மக்களின் குலதெய்வமாகிய முருகனின் கந்தபுராணச் செய்திகளைப் பாடுகின்றது.

### 3. நாட்டுப்புற ஆடல் கலைகள்

இசைக்கலையுடன் தொடர்புடையது ஆடற்கலை என்னும் கூத்துக்கலையாகும். கூத்துக்கலை, இசைக்கலையைப் போன்றே பழைமை வாய்ந்தது. வாயினால் பாடப்பட்ட இசைப்பாட்டுக்குச் “செந்துறைப் பாட்டு” என்றும், கூத்துக் கலைக்குரிய பாட்டுக்கு “வெண்டுறைப் பாட்டு” என்றும் பெயர் உண்டு. (மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் ப.140).

‘கூத்து’ என்னும் சொல் நாட்டியம், நாடகம் ஆகிய இரு கலைகளுக்கும் பொதுவானதாக வழங்கப் பெற்றுள்ளது. நாட்டுப்புறக் கூறுகளில் ஒன்றான இக்கூத்து வகை சிலப்பதிகாரத்தில் காணப்பெறுகின்றது. இது இளங்கோவடிகளுக்கு நாட்டுப்புறப் பாடல்கள் மீதுள்ள ஆர்வத்தினை வெளிப்படுத்துகின்றது.

தனிப்பட்ட ஒருவர் ஆடிய அபிநயக்கூத்து கால வளர்ச்சியில் பலர் பல வேடங்களைப் புனைந்து வந்து மாறிமாறி ஆடும் நிலைக்கு மாறியது என்பதைச் சிலப்பதிகாரமே குறிப்பிடுகின்றது (சிலம்பு 28, 165-166).

பண்டைத் தமிழகத்தில் பதினொரு வகையான ஆடல்கள் சிறப்புற்று விளங்கின என்பதை இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் பதிவு செய்கிறார். அவற்றின் இலக்கணத்தையும் இயல்புகளையும் நன்றாக அறிந்த மாதவியும் நடன மாதர்களும் திறமையுடன் ஆடினர். இந்த ஆடல்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியான விளக்கத்தை இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கடலாடு காதையில் கூறிச்செல்கிறார். இளங்கோவடிகள் குறிப்பிடும் இப்பதினொரு ஆடல்களின் பெயர்கள் பின்வருமாறு:

1. சிவபெருமான் முப்புரத்தை எரித்தபோது, அது எரிமூண்டு எரிவதைக் கண்டு வெற்றி மகிழ்ச்சியினாலே கைகொட்டி நின்று ஆடிய **கொடுகொட்டிக் கூத்து**.
2. சிவன் முப்புரம் எரித்த பின்னர் நான்முகன் காண ஆடியது **பாண்டரங்கக் கூத்து**.
3. கண்ணபிரானை அழிக்கக் கம்சனால் ஏவப்பட்ட யானையின் கொம்பை அல்லித்தண்டுபோல முறித்து ஆடியது **அல்லியக் கூத்து**.
4. கண்ணனும், வாணாசூரனும் நடத்திய மற்போரைக் காட்டுவது **மல்லாடல் கூத்து**.
5. சூரபத்மனை முருகன் வென்ற பின்னர் துடிகொட்டி ஆடியது **துடிக்கூத்து**.
6. முருகப் பெருமான் அவுணர்களை வென்றதைச் சித்தரிப்பது **குடைக்கூத்து**.
7. கண்ணபிரான் தனது பேரப்பிள்ளை அநிருத்தனை (காமனின் மகன்) வாணாசுரனிடமிருந்து மீட்க ஆடிய ஆடல் **குடக்கூத்து**.
8. கொற்றவையை வெல்ல அவுணர்கள் தேள், பாம்பு முதலிய விஷப் பிராணிகளை அனுப்பினர். அப்போது மரக்கால்கள் கொண்டு நடனமாடி கொற்றவை வெற்றி பெறுவதைக் காட்டும் நடனம் **மரக்கால் கூத்து**.
9. மன்மதன் தன் மகன் அநிருத்தனைச் சிறையிலிருந்து மீட்க, பேடி வடிவத்தில் ஆடியது **பேடிக்கூத்து**.
10. போர் செய்ய வந்த அரக்கர்களை அழித்துத் திருமகள் ஆடிய ஆட்டம் **பாவைக்கூத்து**.

11. வாணாசுரனின் தலைநகரின் வடக்கு வாசலில் அயிராணி (இந்திராணி) ஆடியது கடையம் என்னும் **கடையக்கூத்து**.

மேற்கண்ட பதினொரு வகையான ஆடல்கள் மட்டுமில்லாமல் வள்ளிக்கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாடல் போன்றக் கூத்துக்களும் அக்காலத்தில் சிறந்து விளங்கின. மேலும், முற்கூறிய வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை கதைப்பாடல்களாக மட்டுமின்றி இக்கூத்து மரபிலும் அடங்கும்.

## 4. நாட்டுப்புற நம்பிக்கைகள்

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நம்பிக்கைகள் மிகப்பல. இந்த நம்பிக்கைகளே தனிமனித வாழ்வையும் சமுதாய வாழ்வையும் நடத்திச் செல்வனவாக விளங்குகின்றன. நம்பிக்கைகள் எப்பொழுது தோன்றின என்று திட்டவட்டமாகக் கூற இயலாது. எனினும், மனிதன் இயற்கையின் தாக்கத்திற்கு மிகுதியாக ஆட்பட்டிருந்த, அறிவு வளர்ச்சியின் தொடக்க நிலையிலே நம்பிக்கைகள் தோன்றின என்று கூறலாம்.

பழந்தமிழர் பலவகையான நம்பிக்கை உடையவராக இருந்தமையை அவர்தம் வரலாறு நமக்குக் காட்டுகிறது. எந்தவொரு செயலைச் செய்ய நினைத்தாலும் தமிழர் நல்ல நாளையும் நல்ல பொழுதையும் தேர்ந்து, பின்னர் அச்செயலில் ஈடுபட்டால் நன்மையும் வெற்றியும் கிடைக்கும் என நம்பினர். எழுத்துக்கும் சொல்லுக்கும் வலிமை உண்டு என்று நம்பினர். இயற்கைக்கு அப்பாற்பட்ட யாவும் அவர்களால் நம்பிக்கைக்குரியவை எனச் சொல்லப்பட்டன. எனவே, பொதுநிலையில் இவற்றைப் பார்க்க நம்பிக்கை அவர்களின் அச்ச உணர்வின் அடிப்படையில் தோன்றியதாக இடம் அளிக்கிறது. எனினும், பல நம்பிக்கைகளுக்கு காரணம் தெரியவில்லை. ஆயினும், ஒவ்வொரு நம்பிக்கைக்கும் ஏதேனும் ஒரு காரண - காரியத் தொடர்பு பின்னணியாக அமைந்திருக்க வேண்டும் என்பதை மட்டும் உணர முடிகிறது.

- கோவலன் கண்ணகி திருமணச் சடங்கில் முளைப்பாரி வைத்தல்
- வேள்வித்தீ செய்தல்
- அருந்ததி காட்டல்
- மாதவி வலது காலை முன்வைத்து அரங்கினுள் நுழைதல்
- தெய்வங்களுக்கு ஆண்டுதோறும் விழா நடத்தாவிட்டால் மக்களுக்கு நோயும் வறுமையும் ஏற்படும் என்ற நம்பிக்கை
- நாளங்காடியில் உள்ள பூதத்திற்கு மறக்குடிப் பெண்கள் பூ சார்த்தி பொங்கல் படைத்துக் குரவைக் கூத்து ஆடுதல்

- தெய்வத்திற்குப் பலியிடல்
- கடவுளர்கள் மாற்றுருவம் கொண்டு நிலவுலகிற்கு வருவர் என்ற நம்பிக்கை
- கண் துடித்தல்
- கரிக்குருவியின் நன்னிமித்தம்
- கூகை அலறல் மற்றும் இமிலேறு (காளை) எதிர்ப்படும் தீய நிமித்தங்கள்
- முற்பிறவி - இப்பிறவி - மறுபிறவி நம்பிக்கைகள்
- தானத்தின் பயன்
- ஆறு, குளம், கடல்களில் புனித நீராடுதலின் பயன்கள்,
- குலதெய்வத்தின் பெயரைச் சந்ததியினருக்குச் சூட்டுதல்
- கனவுகளின் பயன்
- பிணம் தின்னும் இடாகினிப்பேய்
- சாபமும் சாப விமோசனமும்
- இறந்த பின்னும் வாழும் ஆன்ம நிலை
- அசரீரி வாக்கு
- பதினான்காம் நாள் இறந்தவர் வருதல்
- கதிரவன் பேசுதல், இறந்துபோன கோவலன் எழுந்து பேசுதல், மதுரை எரியுமென வான்குரல் கேட்பது போன்ற இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்
- ஏறு தழுவும் ஆண்மகனைத் திருமணம் செய்தல்
- ஊழ்வினைப் பயன்கள்
- இம்மையில் இறந்தவர்களின் மறுமைப் பிறப்பு (கோவலன், கண்ணகியரின் தாயார்கள், மாதரி)
- தீய மனிதர்களை நரிகளாக்கும் கவுந்தியடிகளின் தவவலிமை
- கற்பினில் சிறந்த ஒரு பெண்ணிற்கு (கண்ணகிக்கு) தெய்வமே அஞ்சுதல்
- கற்புடைய பெண்ணின் முன் தோன்றுவதற்கு அஞ்சி தெய்வம் பின்பக்கமாகத் தோன்றுதல்
- பூதங்கள் கண்ணகியின் கற்புக்குத் தலைவணங்கி நகரைவிட்டு வெளியேறுதல்
- மந்திரங்களுக்குத் தெய்வங்களும் பிறவும் கட்டுப்படுதல்
- வேலன் வெறியாடல்
- கொற்றவைத் தெய்வம் சாலினிமேல் ஏறி தெய்வ ஆவேசமாக வருதல்
- குறி கூறுதல்
- குறி கூறுதலைக் கேட்டு அதற்குப் பரிகாரம் செய்தல்

- ❖ விண்மீன்களால் ஏற்படும் விளைவுகள்

என்று காப்பியம் முழுவதும் நாட்டுப்புற நம்பிக்கைகளைக் கட்டமைத்து அதன்மேல் சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார் இளங்கோவடிகள்.

**முடிவுரை**

சிலப்பதிகாரம் மானுட வாழ்வியலை எடுத்துரைக்கும் குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுள், தமிழ் நிலக் காப்பியம் என்று உரிய காரணங்களால் பலப்பல பெயர்களைப் பெற்றிருக்கின்றன. அவ்வகையில், சிலப்பதிகாரத்தின் பெரும்பான்மையான காதைகள் நாட்டுப்புறவியல் சார்ந்த செய்திகளைக் கொண்டுள்ளன என்பதை மேற்குறித்த சான்றுகளின் அடிப்படையில் நம்மால் அறிய முடிகிறது. இவற்றால், சிலப்பதிகாரம் நாட்டுப்புற வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட முதல் நாட்டுப்புறக் காப்பியம் என்றே உறுதியாகக் கூறலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. அழகப்பன், ஆறு., நாட்டுப்புறப் பாடல்கள் - திறனாய்வு, தி.தெ.சை.சி.நூ.ப.கழகம், சென்னை. 1980
2. அழகு கிருஷ்ணன், பொ., சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. 1988
3. சக்திவேல், சு., நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1992
4. சாமிநாதையர், உ.வே., சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10. பத்தாம் பதிப்பு 1985
5. சேதுப்பிள்ளை, ரா.பி., தமிழின்பம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. 2007
6. வேங்கடசாமி, மயிலை சீனி., தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பாரி நிலையம், சென்னை.
7. வேங்கடசாமி நாட்டார், ந.மு., சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ராமையா பதிப்பகம், சென்னை. 2010

## References

1. Azhagappan, Aru., Nattuppura Paadalgal – Thiranaayvu. South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, 1980.

2. Azhagu Krishnan, P., Silappatikaram Kattum Panpaadum Samudaya Varalaarum. Ainthinai Publications, Chennai, 1988.
3. Sakthivel, S., Nattuppuraviyal Aayvu. Manivasagar Publications, Chennai, 1992.
4. Saminatha Iyer, U.V., Silappathikaram: Moolamum Arumpada Uraiyum Adiyarkku Nallar Uraiyum. Tamil University, Thanjavur, 10th ed., 1985.
5. Sethupillai, Ra. Pi., Tamil Inbam. Palaniappa Brothers, Chennai, 2007.
6. Venkatasamy, Mayilai Seeni., Tamilar Valartha Azhaguk Kalaigal. Paari Nilayam, Chennai.
7. Venkatasamy Nattar, N.Mu., Silappatikaram: Moolamum Uraiyum. Ramaiah Publications, Chennai, 2010.

**முரண்பாட்டு அறிக்கை**

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ அல்லது அது சார்ந்த தரவுகளிலோ எவ்வித நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட நலன் முரண்பாடுகளும் இல்லை என ஆசிரியர் இதன் மூலம் அறிவிக்கிறார்.